**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்,**

முன்னிலை. **திரு. பொ.தி.சதீஷ்குமார், எல்.எல்.எம்,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆரணி.

2021ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.130/2019**

M. இளங்கோ, வயது 40

த/பெ. முத்துசாமி கவுண்டர் .. வாதி

-எதிர்-

1. யசோதா, வயது 65
2. பழனி, வயது 45,
3. சரவணன், வயது 40 .. பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 22.10.2021 அன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. R. நிர்மலா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகளை அழைத்தும் வருகையின்மையால் அவர்களைப் பொறுத்து தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவைகளைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா 'A' ஷெட்யூலில் இருக்கும் சர்வே எண்.110/5ல் ஏக்கர் 0.08 செண்டில் இறைப்பு கிணற்றிலிருந்து தாவாவில் குறிப்பிட்டுள்ள தாவா 'B' ஷெட்யூல் நிலத்திற்கு பிரதிவாதிகள் சட்ட விரோதமாக பைப்லைன் மூலமாக தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பித்தும், தாவா செலவை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தும்படியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்.**

தாவா 1ம் பிரதிவாதியானவர் வாதிக்கு அண்ணி முறை என்றும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாதியின் தகப்பனார் முத்துசாமியின் உடன்பிறந்த சகோரரரான குப்புசாமியின்

பேரப்பிள்ளைகள் என்றும், தாவாவில் ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தான ஆரணி வட்டம் கொங்கரம்பட்டு கிராம் புஞ்சை சர்வே எண்.110/5ல் ஏக்கர் 0.08 செண்ட்டில் உள்ள கிணறு மற்றும் இதர சொத்துக்களான புஞ்சை சர்வே எண்.110/6ல் 0.93ல் 0.17 செண்ட், சர்வே எண்.110/6ல் 0.93ல் 0.7 1/2 செண்ட் சர்வே எண்.110/6ல் 0.93ல் 0.09 செண்ட் மற்றும் சர்வே எண்.103/10 0.19ல் 0.10 செண்ட் ஆகிய நிலங்களும் வாதியின் தகப்பனார் 29.05.1992 தேதியிட்ட குடும்ப ஏற்பாட்டில் நடந்த பாகப்பிரிவினை முன்னிலைக்கு 'C' ஷெட்யூலில் கண்டுள்ள சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டு நாளது தேதி வரையில் வாதி அனுபவித்து வருகின்றார் என்றும், தாவா 'A' ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள கிணற்றில் இருந்துதான் வாதிக்கு 1/3 பாகத்தில் கிடைக்கப்பெற்ற நிலங்களில் பயிர் வைத்து தண்ணீர் எடுத்து சென்று விவசாயத்துக்கு பயன்படுத்திவருகின்றார். அதேபோல 1ம் பிரதிவாதி கணவரும் 2, 3 பிரதிவாதிகளது தகப்பனார் ஆன ராமமூர்த்தியின் தகப்பனார் ஆன குப்புசாமியின் பாக சொத்தை அவர்களது காலத்திற்கு பிறகு ராமமூர்த்தியும் அவர் காலமான பிறகு பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர் என்றும், அனைவருக்கும் தாவா 'A' ஷெட்யூலில் அமைந்துள்ள கிணறு மட்டுமே நீர்பாய்ச்சல் ஆதாரமாக உள்ளது என்றும், மழைக்காலத்தில் மட்டும் பயிர் செய்ய இயலும் என்றும், வாதி இந்த தாவாவுடன் 29.05.1992 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பதிவு நகலை தாக்கல் செய்வதாகவும், வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு தாவா 'A' ஷெட்யூலில் அமைந்திருக்கும் கிணற்று தண்ணீர் மட்டுமே நீர் பாசன ஆதாரம் என்றும், மழை காலத்தில் மட்டுமே வாதி மற்றும் பிரதிவாதிகள் பயிர் செய்து வருகின்றார்கள் என்றும், வாதி பயிர் செய்வதை பிரதிவாதிகள் எப்பவும் ஆட்சேபனை

செய்ததில்லை என்றும், அதேபோல் பிரதிவாதிகள் அவர்களது பாக நிலத்தில் தாவா 'A' ஷெட்யூலில் நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து சென்று பயிர் வைப்பதை வாதி எப்பவும் தடை செய்தது கிடையாது என்றும், மேலும், தாவா பிரதிவாதிகளுக்கு வாதி 'A' ஷெட்யூலில் கிணறு மற்றும் பாகத்தில் கிடைக்கப்பெற்ற சொத்துக்களுக்கு மேற்கு பக்கம் சிமெண்ட் சாலை உள்ளது என்றும், அதற்கு அடுத்த மேற்கு பக்கம் சர்வே எண்.100/3ல் 0.40 செண்ட் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வேறு நிலம் உண்டு என்றும், அது வானம் பார்த்த பூமி என்றும், அதில் மழைக்காலத்தில் மட்டும் மானாவாரி பயிர் மட்டுமே செய்ய முடியும் என்றும், அதில் கிணறு ஏதும் இல்லை என்றும், கிணற்று நீர் ஆதாரம் ஏதும் கிடையாது என்றும், தாவா 'A' ஷெட்யூலில் சொத்து வாதி மற்றும் பிரதிவாதிகளது பாகமாக கிடைக்கப்பெற்ற கிணற்று தண்ணீரை பி.வி.சி பைப் மூலமாக நீர் ஆதாரம் இல்லாத 'B' ஷெட்யூல் சொத்துக்கு சட்டவிரோதமாக பிரதிவாதிகள் தண்ணீர் எடுத்து செல்கின்றார்கள் என்றும், இதை பற்றி வாதியும், அவரின் மனைவியும் பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு முன்னுக்குப்பின் முரணாக பேசியும், அவதூறாக பேசியிருக்கிறார்கள் என்றும், இது சம்மந்தமாக வாதி பிரதிவாதிகள் மீது கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் புகார் செய்தும் அதன்பேரில் போலீசார் விசாரணை செய்தபோது நீர் ஆதாரம் இல்லாத நிலத்துக்கு தண்ணீர் எடுத்து செல்ல மாட்டோம் என்று ஒப்புக்கொண்ட பிரதிவாதிகள் தொடந்து நீர் பாய்ச்ச ஆதாரம் இல்லாத 'B' ஷெட்யூல் நிலத்திற்கு 'A' ஷெட்யூலில் இருந்து தண்ணீர் எடுத்து செல்கிறார்கள் என்றும், பிரதிவாதிகளது இத்தகைய செய்கையால் வாதியால் அவரது நிலங்களுக்கு பயிர் வைக்க போதிய நீர் இல்லாமல் கரம்பாகவே உள்ளது என்றும், மேலும் வாதி இந்திய இராணுவத்தில் பணியாற்றி வருவதால் வாதியின் மனைவிதான் நிலங்களை

பராமரித்து வருகின்றார் என்றும், இதை தங்களுக்கு சாதகமாக எடுத்துக் கொண்ட பிரதிவாதிகள் தொடர்ந்து பிரச்சினைகள் செய்து வருகின்றார்கள். வாதி கடந்த 02.08.2019ம் தேதி பிரதிவாதிகளுக்கு இது சம்மந்தமாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றும், பிரதிவாதிகள் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு தப்பு சங்கதிகளை கண்டு 27.08.2019ல் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும், வாதி இந்த தாவாவுடன் வாதி பிரதிவாாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சார்வு செய்யப்பட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் மற்றும் பிரதிவாதிகள் வாதியின் வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு இவைகளை இந்த தாவாவுடன் தாக்கல் செய்யப்படுகிறது என்றும், எனவே வாதியானவர் இந்த தாவாவை தாவா 'A' ஷெட்யூல் கிணற்றில் இருந்து நீர் பாய்ச்சல் ஆதாரம் இல்லாத தாவா 'B' ஷெட்யூல் நிலத்துக்கு தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என்று ஒரு நிரந்தர செயலுறுத்து கட்டளை கோரியும், வழக்கு செலவுத்தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு வழங்கிடவும் வாதி இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி தரப்பில், வா.சா.1 மற்றும் வா.சா.2-ஐ விசாரணை செய்தும், வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இவ்வழக்கில் தற்போது தீர்வு காணவேண்டியது, வாதியின் கோரிக்கை ஏற்கப்பட்டு, வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**5.தீர்வு.**

(5.1) இவ்வழக்கில், வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டபோது, தன் வழக்குரை விவரங்களை தெரிவித்து சாட்சியம் அளித்துள்ளார். 29.05.1992 தேதியிட்ட பாகப்பிரிவினை சான்றளிக்கப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ-1 ஆகவும், தாவா சொத்திற்கான வரைபடம் வா.சா.ஆ.2 ஆகவும், 02.08.2019 தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ3 ஆகவும், 06.08.2019 தேதியிட்ட 1ம் பிரதிவாதி கையொப்பமிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.த.சா.ஆ.4 ஆகவும், 06.08.2019 அன்று 2ம் பிரதிவாதி கையொப்பமிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், 06.08.2019 தேதியிட்ட 3ம் பிரதிவாதி கையொப்பமிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.6 ஆகவும், 27.08.2019ம் தேதியில் பிரதிவாதிகள் வாதி வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(5.2) பிரதிவாதிகள் தரப்பில் தாவாவில் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதிகளை அழைத்தும் வருகையின்மையால் அவர்களைப் பொறுத்து தோன்றா தரப்பினராகத் தீர்மானிக்கப்பட்டும், வாதி அவரது தரப்பு சங்கதிகளை அவர் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் கொண்டு நிரூபித்துள்ளார். பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தின் முன் தகுந்த ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் மூலம் வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாததால், இந்திய சாட்சிய சட்டம் 114(g)-யின் படி பிரதிவாதிகளுக்கு எதிரிடையாக அனுமானிக்க வேண்டியிருப்பதால், வாதியின் கோரிக்கை ஏற்கக்கூடியதாகவே உள்ளது. எனவே, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதன்மை பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் அடிப்படையிலும் தாவா 'A' ஷெட்யூலில் இருக்கும் சர்வே எண்.110/5ல் ஏக்கர் 0.08

செண்டில் இறைப்பு கிணற்றிலிருந்து தாவா 'B' ஷெட்யூல் நிலத்திற்கு பிரதிவாதிகள் சட்ட விரோதமாக பைப்லைன் மூலமாக தண்ணீா் எடுத்து செல்லக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு கோரியும், தாவா செலவை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தும்படியும் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6. **இறுதியாக,** தாவா 'A' ஷெட்யூலில் இருக்கும் சர்வே எண்.110/5ல் ஏக்கர் 0.08 செண்டில் இறைப்பு கிணற்றிலிருந்து தாவாவில் குறிப்பிட்டுள்ள தாவா 'B' ஷெட்யூல் நிலத்திற்கு பிரதிவாதிகள் சட்ட விரோதமாக பைப்லைன் மூலமாக தண்ணீா் எடுத்து செல்லக்கூடாது என்றும், தாவா செலவை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2021ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறியப் பகரப்பட்டது.

**(ஒம்)/-பொ.தி.சதீஷ்குமார்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆரணி.**

**வாதி தரப்பு சாட்சி.**

வா.சா.1 - இளங்கோ ( வாதி).
வா.சா.2- சுசீலா

**வாதி தரப்பு சான்றாவணங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.05.2019 | தேதியிட்ட பாகப்பிரிவினை சான்றளிக்கப்பட்ட கணினி நகல் | நகல் |
| வா.சா.ஆ.2 | -- | தாவா வரைபடம் | நகல் |
| வா.சா.ஆ.3 | 02.08.2019 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 06.08.2019 | தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |

| | | | |
|---|---|---|---|
| | | (1ம் பிரதிவாதி) | |
| வா.சா.ஆ.5 | 06.08.2019 | தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை (2ம் பிரதிவாதி) | அசல் |
| வா.சா.ஆ.6 | 06.08.2019 | தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை (3ம் பிரதிவாதி) | அசல் |
| வா.சா.ஆ.7 | 27.08.2019 | தேதியிட்ட பதில் அறிவிப்பு | அலுவலக நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணம்**: இல்லை.

**(ஒம்)/-பொ.தி.சதீஷ்குமார்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆரணி.**